**நாத்தாண்டிய பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 24 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாத்தாண்டிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் இறுதியிருப்பைக் கணிப்பீடு செய்யும் போது, மருந்து இருப்பும் கூட்டுப்பசளை இருப்பும் முறையே ரூபா 301,187 மற்றும் ரூபா 12,500 தொகை குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4,440,000 தொகையான நிலையான சொத்துக்கள் ஆண்டின்போது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வாடகை வருமானம் ரூபா 13,496 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 பொருத்தமான வெளிப்படுத்தல்

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களாக எதிர்வரும் நிதியாண்டில் தேறுவதற்கு அல்லது செலுத்துவதன் கீழ் கொடுக்கல் வாங்கல் காண்பிக்கக்கூடியதாக இருந்ததுடன் பிரதேச சபையினால் எதிர்வரும் ஆண்டில் அறவிடுவதற்கு அல்லது செலுத்துவதற்கு எந்தவித வேலைத்திட்டமும் இன்றி ரூபா 65,928,207 தொகையான 14 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 8,949,918 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் என்பன நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

வைப்புக் கணக்கிற்குரிய பொதுப் பேரேட்டிற்கும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கும் இடையே ரூபா 131,074 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 ஆம் ஆண்டு முதல் 2004 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை இலங்கை மின்சார சபையின் வென்னப்புவ மின்சார பொறியியலாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய வீதி விளக்கு மீளளிப்புத் தொகையான ரூபா 1,167,000 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி நிறுவன பொதுச் சங்கத்தினால் 1999 ஆம் ஆண்டின் போது சபையிலிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையினை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2007 ஆம் ஆண்டு முதல் கிடைக்கவேண்டிய வட்டித் தொகை கணிப்பீடு செய்தலும் கைவிடப்பட்டிருந்தது.

(இ) அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டிய மூலதன மானியங்கள் ரூபா 6,967,210 தொகையில் 2002 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை கிடைக்கவேண்டிய ரூபா 1,029,535 தொகையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 180,955,305 பெறுமதியான 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதி உறுதிப்படுத்தல், விரிவான பட்டோலை போன்ற சான்றுகள் இன்மையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,466,145 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 57,251,512 ஆக இருந்தது. மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் முறையே ரூபா 47,240,310 மற்றும் ரூபா 42,730,279 தொகையான மூலதன மானியம் மற்றும் ரூபா 113,829,968 மற்றும் ரூபா 91,017,022 தொகையான மூலதனச் செலவினங்கள் கணிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அதன் பற்றாக்குறை மற்றும் மிகைகள் முறையே ரூபா 22,093,514 மற்றும் ரூபா 8,964,769 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 31,058,283 தொகையான குறைவைக் காணமுடிந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 213 மில்லியன் ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 202 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 11 மில்லியன் அதிகரித்திருந்த போதிலும், அதில் சம்பள மீளளிப்பிற்காக கிடைத்த பணத்தில் அதிகரித்திருந்த ரூபா 13.7 மில்லியன் தொகையும் உள்ளடக்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினம் ரூபா 168 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் செலவினமான ரூபா 145 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 23 மில்லியன் அதிகரிப்பாகும்.

(இ) மீளாய்வாண்டில் மூலதன வருமானம் ரூபா 47 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மூலதன வருமானமான ரூபா 42 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 05 மில்லியன் அதிகரிப்பாகும். மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினம் ரூபா 114 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டைவிட ரூபா 23 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட நிலைமையைக் காரணமாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 22 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மிகையான ரூபா 8.9 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 31 மில்லியன் நிதி விளைவில் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான விடயம் | ஆண்டில் பட்டியலிடல் | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் பெறுவனவு | ஆண்டில் மொத்தப் பெறுவனவு | திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | 17,756 | 9,295 | 17,174 | 24,609 |
| (ஆ) | வாடகை | 19,673 | 19,368 | 20,204 | 1,435 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,231 | 5,231 | 9,246 | 618 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 1,430 | 999 | 1,488 | 484 |

## 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான பட்டியலிடல், வருமான சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானத் தலைப்பு | வருமான பட்டியலிடல் | | | வருமான சேகரித்தல் | | | | நிலுவை வருமானம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015-01-01 இல் உள்ளவாறு நிலுவை | 2-15 ஆம் ஆண்டின் பட்டியலிடல் | மொத்தம் | நிலுவையில் சேகரிக்கப்பட்ட தொகை | பட்டியலிடலில் சேகரிக்கப்பட்ட தொகை | எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்த தொகை | சேகரிக்கப்பட்ட தொகை | நிலுவையில் மிகுதித் தொகை | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நிலுவை | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனவரி | 24,449,185.43 | 15,725,169.98 | 40,174,355.41 | 7,816,369.53 | 8,536,819.44 | 1,571,694.83 | 17,924,883.80 | 16,632,815.90 | 7,188,350.54 | 23,821,166.44 |
| ஏக்கர் வரி | 709,611.48 | 74,483.23 | 784,094.71 | 30,722.30 | 28,462.49 | 3,000.03 | 62,184.82 | 678,889.18 | 46,020.74 | 724,909.92 |
| வாடகை | 1,004,814.68 | 15,670,213.04 | 16,675,027.72 | 178,258.69 | 15,544,396.14 | 1,404.80 | 15,724,059.63 | 826,555.99 | 125,816.90 | 952,372.89 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,632,417.19 | 5,231,421.87 | 8,751,899.06 | 4,014,761.53 | 5,231,421.87 | - | 9,246,183.40 | 617,655.66 | - | 617,655.66 |
| கடை வாடகை | 918,937.04 | 3,663,313.00 | 4,582,250.04 | 659,814.65 | 3,439,512.51 | 8,872.90 | 4,108,200.06 | 259,122.39 | 223,800.49 | 482,922.88 |
| ஏனையவை | 35,294,328.73 | 72,531,893.24 | 107,826,221.97 | 27,618,410.97 | 63,189,175.65 | 1,445.78 | 90,809,032.40 | 7,675,917.76 | 9,342,717.59 | 17,018,635.35 |
| முத்திரைக் கட்டணம் | 125,939,443.23 | 64,000,121.00 | 189,939,564.23 | 79,652,752.00 | - | - | 79,652,752.00 | 46,286,691.23 | 64,000,121.00 | 110,286,812.23 |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 29,532,358.00 | 24,735,691.00 | 54,268,049.00 | 29,252,775.00 | 16,025,705.00 | - | 45,278,480.00 | 279,583.00 | 8,709,986.00 | 8,989,569.00 |
| | | | | | | | | | | - |
| மொத்தம் | **222,481,095.78** | **200,520,366.36** | **423,001,462.14** | **149,223,864.67** | **110,883,553.10** | **1,586,418.34** | **262,805,776.11** | **73,257,231.11** | **89,636,813.26** | **162,894,044.37** |

### 2.3.3 வாடகை

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 10 வாடகையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை வாடகையான ரூபா 826,357 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 10 வாடகை ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன் அதற்காக ஆகக் குறைந்த கேள்வி பெறுமதி அடிப்படையாகக் கொள்ளப்படுமாயின் இழக்கப்படும் வருமானம் ரூபா 785,930 ஆகும்.

### 2.3.4 வியாபார வரி

வியாபாரங்களுக்காக வரி அறவிடும் போது அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற வியாபாரங்களை இனங்கண்டு அந்த வியாபாரங்களிலிருந்து பட்டியலிடப்பட்ட வருமானங்கள் சேகரிக்கப்பட வேண்டிய போதிலும், சேகரிக்கப்பட்ட வருமானத்தை மாத்திரம் கவனத்தில் கொண்டு வியாபார வரி பட்டியலிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டினதும் நடப்பாண்டினதும் வியாபார வரிப் பதிவேட்டின் பிரகாரம் சேகரிக்கப்படாமல் கைவிடப்பட்ட வியாபார நிலையங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.3.5 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையினால் பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணங்களிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிடவேண்டியிருந்த முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 110,286,812 ஆக இருந்தது. அதில் ரூபா 11,534,507 தொகை 1991 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையாக இருந்ததுடன் 05 வருடங்களை விட பழைய அந்த மீதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய உறுதிப்படுத்தலொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம்

மாகாணத்தின் பிரதம செயலாளரிடமிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணத்தின் பெறுமதி ரூபா 8,989,569 ஆகும். அதில் ரூபா 279,583 தொகை 2002 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணமாகும்.

### 2.3.7 களியாட்ட வரி

மீளாய்வாண்டில் அதிகாரப் பிரதேசத்தில் இரண்டு சினிமா திரையரங்குகளிலிருந்து நிலுவை களியாட்ட வரித்தொகையான ரூபா 63,509 அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.8 காணி விற்பனையின் அடிப்படையிலான வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குள் காணி விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தில் 1 சதவீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் ஏலமிடப்பட்டிருந்த காணிகளின் மதிப்பீட்டு விற்பனைத் தொகையிலிருந்து 1 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபையில் சேவையாற்றிய ஊழியர்களுக்காக அரசாங்க சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துவதற்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் கொடுப்பனவுகள் உரிய பிரகாரம் அவற்றை செலுத்தாமையின் காரணமாக சபைக்கு விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் மீளய்வாண்டின் இறுதியில் ரூபா 47,728 ஆகும்.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் போது 21 சொத்துக்களுக்காக ஆகக் குறைந்த கேள்விக்கு மிகவும் கிட்டிய விலையில் ஒருநபர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்ததுடன் 10 சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையின் 2006 ஆம் ஆண்டின் வாராந்த சந்தையினை வாடகைக்கு வழங்கல் மற்றும் ஆதனவரி வருமானத்திற்காக முறையே இரண்டு நபர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 437,207 மற்றும் ரூபா 22,029 பெறுமதியான காசோலைகள் மதிப்பிழந்திருந்தும் அத்தொகையை அறவிடுவதற்கு சபையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை உள்ளூராட்சி ஊழியர் பொதுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 100,000 தொகையான கடன் பணத்திற்காக 2007 ஆம் ஆண்டு வரை கிடைக்கவேண்டிய வட்டி ரூபா 10,835 ஆகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2007 ஆம் ஆண்டின் பின்னர் பெறவேண்டிய வட்டி கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.2 அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறவேண்டிய மூலதன மானியம் ரூபா 3,327,000 தொகை மீளாய்வாண்டின் நாட்குறிப்பு பதிவு இலக்கம் 29 இன் மூலம் திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு பதிவு இலக்கம் 25 இன் மூலம் உத்தியோகத்தர்களின் கையிலுள்ள பணம் ரூபா 102,929 தொகை அங்கீகாரமின்றி திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 296,700 தொகையான நிலுவை வருமானம் தொடர்பான விபரங்களை இனங்காணாது அங்கீகாரமில்லாமல் திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2002 ஆம் ஆண்டின் போது அறுவைக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு 04 நபர்களுக்கு ஒரு நபருக்கு ரூபா 150,000 வீதம் ரூபா 600,000 தொகையொன்று முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் அந்தக் காணியின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது மீண்டும் அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 ஊழியர் கடன்**

ரூபா 11,646,697 தொகையான ஊழியர் கடன் மீதியில் பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 608,265 தொகையும், சேவைக்கு அறிக்கையிடாத ஊழியர்களிடமிருந்து ரூபா 120,416 தொகையும், சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 102,564 தொகையும் அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 159 ஆக இருந்ததுடன் 212 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமையின் காரணமாக 65 ஊழியர்களின் மிகையொன்று வெளிப்படுத்தப்பட்டது. ஆரம்ப தொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 114 ஆக இருந்ததுடன் சேவையில் இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 176 ஆகும். இதன் பிரகாரம் மொத்த ஊழியர் மிகையும் ஆரம்பப் பிரிவில் காணக்கூடியதாக இருந்ததுடன் ஏனைய சேவைகளில் 12 வெற்றிடங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதியளவான பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய PFD/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04(அ) முதல் (ஊ) வரையான பந்திகளின் பிரகாரம் நீண்ட கால நோக்குடன் உரிய பிரதேச சபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு மாற்றமான முறையில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்